1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 41-ம இலக்கம்

# 24-10-54 விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

## "நீங்கள் உலகமெங்கும் போய் எல்லாச் சிருட்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" —(மாற்கு 16—15)

சூரியவெப்பம் தீபோலச் சுடுகின்ற அதிகங் காங்கையான உட்டண மண்டலங்களிலும், எலும்பையே ஊடுருவிச்சென்று உடலை நடுங்கவைக்கும் சீதள மண்டலங்களிலும், கொடியவன மிருகங்கள் சுற்றித்திரிந்து பயங்கரம் விளைக்கும் காடுபுறங்களிலும், விஷசுரம், விஷபேதி, வைசூரிமுதலாம் அச்சத்தைத்தரும் கொள்ளைநோய்கள் என்றைக்குமே தலைகாட்டிக் கொண்டிருக்கும் நாடுபுறங்களிலும், பொதுவிலே இப்பூமண்டலத்தில் பரந்துள்ள பல்வேறுதேசங்களிலும், தீவுதீவாந்தரங்களிலுமே மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, எதற்குமே அஞ்சாது, அவமதிப்பே கொள்ளாது கருமமே கண்ணாயிருந்து அல்லும் பகலும் அயராதுழைத்துவருகின்ற ஓர் ஞானப்பட்டாளம இருந்துவருகின்றது. உலகமெங்கும் போய்ச் சகலசாதிசனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள்; இதோ நான் உலக முடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேனென்று மனுக்குலத்தின் இரட்சாபெருமானாகிய யேசுக்கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றிய திருவாக்கைச் சிரமேற்கொண்டு, தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றினையும் அவரது திருக்கட்டளையை நிறைவேற்றுதற்கென அர்ப்பணஞ்செய்து, இப்பரந்தஉலகின் ஈர்நான்கு திக்கிலுஞ்சென்று வேதபோதகஞ் செய்துவருகின்ற கத்தோலிக்க மிஷனரிமார்களின் மாபெரும் ஞானச்சைனியமே இந்தஞானப்பட்டாளமாகும்.


மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னிகாஸ்திரீமாராய்ப் பதினாயிரக்கணக்கானோரைக்கொண்ட இந்தமிஷனரிமார்கள்–கிறீஸ்துவபிறர்சிநேகத்தால் தூண்டப்பெற்றுத் தங்கள் பெற்றோர் இனசனரைத் துறந்து, தங்கள்பிறந்த பொன்னாட்டைத்துறந்து, உலக சுகசெல்வ பாக்கியங்களைத்துறந்து வேத போதக தொண்டிலும், கிறீஸ்துவ பிறர்சிநேக தொண்டிலும் ஈடுபட்டுவருகின்ற—விசுவாசத்தைப் பரப்பிவருகின்ற கிறீஸ்துநாதரின் இந்தஞானப் போர்வீரர்களான இவர்களெல்லாம் நமதுஉதவியைஎதிர்பார்க்கின்றார்கள். தாங்கள் உயிர்வாழ்வதற்கும், தாங்கள்ஆற்றிவரும் அநேகாநேக திருத்தொண்டுகளுக்கும் வேண்டிய உதவிகளை அடுத்துவரும் விசுவாசப்பரப்புதல் ஞாயிறன்று நாம்செய்வோமென்றும், நமது செபங்களினால்தேவஆசீர்வாதம் தங்கள்வேலைகளில் வந்திறங்கச் செய்வோமென்றும் நம்பிக்காத்திருக்கின்றார்கள்.

தேவநேசத்தாலும், பிறர்சிநேகத்தாலும் மனந்தூண்டப் பெற்று [illegible] கொடுக்கும்பணம் ஒருசிறு தியாகமேயாகும். ஆனால், பலதுளி பெருவெள்ளம் ஆவதுபோன்று சகல கத்தோலிக்க மக்களும் கொடுக்கின்ற இச்சிறுசிறு தொகையெல்லாம்சேர்ந்து ஈற்றில் பெருந்தொகையாகி விடுமன்றோ! நமதுசெபத்தாலும், பரித்தியாகத்தாலும், தானதர்மத்தாலும் நாமும் திவ்வியயேசுவின் இராச்சியத்தைப் பரப்பவேண்டும். "உம்முடைய இராச்சியம் வருக" என்ற பரமண்டல மந்திர வார்த்தைகளை நினைவுகூர்ந்து விசுவாசப் பரப்புதற் சபையிற்சேர்ந்து நாமும் அப்போஸ்தலராக விளங்கவேண்டும்.

விசுவாசப் பரப்புதல்ஞாயிறு கத்தோலிக்க மக்களாகிய நமக்கெல்லாம் ஓர் பொன்னாள். [illegible]ள். ஓர்பெருந் திருநாளென்றாலும் தகும். ஏனெனில், நம்திருமறையின் நோக்கம், இம்மண்ணுலகில்வாழும் மக்கள் அனைவரையும் யேசு இராசாவின் ஆளுகையின்கீழ் கொண்டுவந்து சேர்ப்பதே. இதனை ஞாபகத்துக்குக் கொணர்ந்து கத்தோலிக்க மக்களிடையே பிறராத்தும இரட்சணிய ஆவலை அதிகரிக்கச்செய்து, வேதப் பரப்புதல்வேலையில் அவர்களை அதிகமதிகமாக ஈடுபடப்பண்ணுதற்கென்றே "மிஷன் ஞாயிறு" எனப்படும் இந்த விசுவாசப் பரப்புதல்ஞாயிறு ஏற்படுத்தப்பட்டது. அஞ்ஞான இருவில் ஆழ்ந்திருக்கும் கோடிக் கணக்கான மானிடர்களை எம் திருமறையில் கொண்டுவந்து சேர்க்குங்கடமை குருமாரைமட்டும் சார்ந்ததல்ல. கிறீஸ்தவனென்று நாமந் தாங்கியுள்ள ஒவ்வொருவரையுமே சார்ந்தது. அதனால் இவர்கள் ஒவ்வொருவருமே ஒவ்வோர் மிஷனரியாய் இருக்கவேண்டும். உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் போதிக்க முடியாதவர்கள் தங்கள் செபத்தினாலும், தானதருமத்தினாலும் அவ்வாறு செய்யவேண்டும். ஒவ்வோர் கிறீஸ்தவனும் பரமண்டல மந்திரஞ் சொல்லும் ஒவ்வோர்முறையும் "உம்முடைய இராச்சியம் வருக" என்று சொல்லுகிறான். அவ்வாறு சொல்லும்போதெல்லாம் தானும் ஓர்மிஷனரிதான் என்பதை உறுதிசெய்கிறான். அதனால் ஒவ்வோர்கத்தோலிக்கனும் தான் ஓர்மிஷனரியென்பதை உள்ளத்தில் நன்றாகப் பதித்து, வேதப்பரப்புதலுக்குப் பொருளுதவி செய்துவரவேண்டும். இந்தஉதவிசெய்ய இயலாவிடின் செபம், தபம், தியாகம் முதலியனசெய்து உதவி புரியவேண்டும். மிஷன் நாடுகளின் பாதுகாவலாளியான அர்ச். சின்னத்தெரேசம்மாள் தனது செபத்தாலும், சிறுசிறு தியாகமுயற்சிகளாலும் எண்ணிறந்த ஆத்துமாக்களை மனந்திருப்பினாள் அன்றோ! "கேளுங்கள், கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள், கண்டடைவீர்கள்" என்று திவ்வியயேசு செப்பியிருக்கின்றார். ஆதலால் இடைவிடாது செபிப்போமாக!

### விசுவாசப் பரப்புதலுக்காகச் செபம்

சகல மனுஷரும் சத்தியத்தைக் கண்டுணர்ந்து இரட்சணியமடைய வேண்டுமென்று விரும்புகிற சருவேசுரா சுவாமி! வேளாண்மைக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்பியருளும். உமது திருவேதத்தை உற்சாகத்தோடு போதிக்க அவர்களுக்குத் தைரியத்தை அளித்தருளும். சுவிசேஷத்தைச் சகலரும் கேட்டு ஸ்துதிக்கவும், ஏகமெய்யான கடவுளாகிய உம்மையும், உம்மால் அனுப்பப்பட்ட உமது தெய்வீக சுதனும், எங்கள் ஆண்டவருமாகிய யேசுநாத சுவாமியையும் சகல சாதி சனங்களும் அறிந்து ஏற்றுக்கொள்ளவும் கிருபைகூர்ந்தருளும்.



வேதப் பரப்புதலுக்காக
இந்தப்பிள்ளைகள் பக்தியுடன் செபஞ்செய்கிறார்கள்.
நீங்களும் அப்படிச் செய்துவருகிறீர்களா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தப்பிள்ளைகள் கேட்பது என்ன?



சின்ன அண்ணன்மாரே! சிறிய அக்காமாரே! இதோ எங்களைப்பாருங்கள்! நாங்களும் உங்களைப்போல மனிதப் பிறவிகள் தான். ஆனால், உங்களைப் பார்க்க, மேய்க்க அப்பா உண்டு. அம்மா உண்டு. தாத்தா உண்டு. பாட்டி உண்டு. இவர்களை விட வேறும் எத்தனையோ பேர் உண்டு. ஆனால், எங்களுக்கு அப்படி ஒருவரும் இல்லை. ஐயோ! நாங்கள் பூமியில் குழந்தைகளாகப்பிறந்ததும் கண்முழியாத நாய்க்குட்டிகள், பூனைக்குட்டிகள்போல் எங்களைக் கான்களிலும், ஆற்றங் கரை, குளக் கரைகளிலும், பறுகு பற்றைகளிலும், குப்பைத் தொட்டிகளிலும் வேண்டாப்பிள்ளைகளாக விசி எறிந்து விட்டார்கள், எங்களைப் பெற்ற தாய் தந்தையர்கள். ஆனால், அந்த இரக்க சிந்தைஉள்ள கல்லகன்னியாஸ்திரீமார் எங்களைக் கண்டெடுத்து, கழுவித் துடைத்து, உணவு ஊட்டிப் பெற்ற தாய்மார்போல் பேணி வளர்த்து வருகிறார்கள், எங்களைப்போல இப்படியாக அவர்கள் வளர்த்து ஆளாக்கிவிட்ட அனாதைகள் அனந்தம். இவர்கள் எவரின் உதவியைப் பெற்று இவ்வாறு செய்து வருகிறார்கள்? உலகமுழுவதிலும் திருப்பால சபையில் சேர்ந்த சிறுவர் சிறுமிகள் கிழமைதோறும் சதம் சதமாகக் கொடுக்கும் பணஉதவியைக் கொண்டுதான். ஆதலால் சிறுவர், சிறுமிகளாகிய நீங்களும் இந்தச்சபையில் சேர்ந்து எங்களுக்கும், எங்களைப்போன்ற அனாத குழந்தைகளுக்கும் உதவி செய்யமாட்டீர்களா? இதை எல்லாம் சொல்லி உங்கள் அப்பா, அம்மாவிடம் பணம் கேட்டால் அவர்கள் மனம் இரங்கி எதும் தரமாட்டார்களா?

அண்ணன்மாரே! அக்காமாரே! அரியபிறவிகளே! சொக்கிளேற், மிட்டாய், கடலை, லாலாமுட்டை, சுண்டல்ஆகியன வாங்கித் தின்னவென்றும், மற்றும் பலவித பொழுது போக்குக்கென்றும் உங்களுக்குப் பணங் கொடுக்கிறார்கள் அல்லவா? நீங்கள் கொஞ்சம் ஒறுத்தல் செய்து அந்தப் பணத்தைத் திருப்பால சபைக்குக் கொடுத்தால் அது எங்களுக்கு என்ன பெரும் உதவியாய் இருக்கும்! எங்களுக்கு எவ்வளவு பெரும் ஆறுதலாக இருக்கும்! நினைத்துப் பாருங்கள். ஆதலால், இனிமேலாவது எங்களை நினைவு கூர்ந்து உங்களை ஒறுத்து இந்த உதவியைச் செய்து எங்களுக்கு உயிர்ப் பிச்சை தாருங்கள்.

## —: அறிவுச் சுடர் :—

**1.** முதல் ஆகாயப் பிரயாணிகள் யார்? மனிதரா?

இல்லை. ஒருசெம்மறியாடும், ஒரு கோழியும், ஒருதாராவுமே முதல் ஆகாயப்பிரயாணிகள் இந்தமுதல் ஆகாயப்பிரயாணம் 1783-ம் ஆண்டு பிரான்சிலே வேர்சேல்ஸ்நகருக்குச் சமீபமாக ஓர் கடுதாசிப்பலூனில் நடைபெறலாயிற்று.

**2.** முற்காலத்திலே பைசான்ரியம் என அறியப்பட்டிருந்த பட்டணம்எது?

கொன்ஸ்தாந்திநோப்பிள். இப்பட்டணம் தற்போது இஸ்தன்புல் என்ற பெயரால் அறியப்படுகிறது.

**3.** பிரசித்திபெற்ற கருதினால் நியூமன் ஆண்டவரை அறிந்தகுருப்பிரசாதிகளில் எவராவது இன்னமும்சீவந்தரா யிருக்கின்றாரா?

ஆம், இங்கிலாந்திலே பேர்மிங்காம் நகரிலுள்ள பிரத்தியேக செப கூடத்தைச் சேர்ந்தவரான வண. டெனிஸ் ஷியில்சுவாமியார் இன்னுமே சீவந்தராயிருக்கின்றார். இவருக்குத் தற்போதுவயது 89 பேர்மிங்காம்நகர் அதிமேற்றிராசனத்திலுள்ள அதிவிருத்தாப்பிய குருப்பிரசாதியும் இவரே. அந்தச்செப கூடத்தில் கருதினால் நியூமன் ஆண்டவருடன் தொடர்புபூண்டிருந்த கடைசியான ஆளும் இவரே.

**4.** உலகில் கம்யூனிஸ்த கட்சியைத் தனது நாட்டிலே சட்டவிரோத மானதாக்கிய கடைசியான நாடுஎது?

அமெரிக்க ஐக்கியதேசம். இதுகம்யூனிஸ்தகட்சியைச் சட்டவிரோதமாக்கிய உலகின் 42-வது நாடாகும்.

**5.** வட துருவத்துக்கும், தென் துருவத்துக்கும் மேற்பரப்பிலுள்ள வித்தியாசம்என்ன?

வடதுருவம் பனிக்கட்டியால் மூடப்பட்ட சலப்பாகமாகும். தென்துருவம் பனிக்கட்டியால் மூடப்பட்ட தரைப்பாகமாகும். இந்தத்தரை 9,500 அடி உயரமுடைய மலைப்பாங்கான இடமாகும்.

**6.** அகில்என்பது என்ன?

இது சந்தனமரத்தைப்போன்ற ஓர் வகைமரம். இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும், அசாமிலும், பர்மாவிலும் இதுவளர்கிறது. 60முதல் 70அடி உயரமும், 5முதல் 8அடி சுற்றளவுமுடையது. முதிர்ந்தமரங்களினுள் இடையிடையே பிசின்போன்ற எண்ணெய்ப்பற்றுடைய வைரமான கறுப்பு வஸ்துகாணப்படும். அதுவே அகிலாகும். அகிற்கட்டைகளிலிருந்து ஒருவித வாசனைத்திரவியமும் இறக்கப்படுகின்றது. அகில்வைரம் எரித்துத் தூபமிடுவதற்குப் பயன்படுகிறது.

## விசுவாசப் பரப்புதல் ஞாயிறு இதோ! வந்துவிட்டது.



## நானும் இதோ! வந்திருக்கிறேன்.

எனது அன்பான மக்களே!

நீங்கள் என்னைப் பிரசங்க பீடத்தில் கண்டதே சாத்தான்பிள்ளையும் ஆஹா! பிரசங்கஞ் செய்ய வந்துவிட்டார் என்று சன்னை, சரசம் பண்ணுவீர்களாக்கும். நீங்கள் சன்னை பண்ணினுலென்ன! சரசஞ் செய்தாலென்ன! சாத்தானே, அப்பாலே போவென்று விரட்டினுலென்ன! இவைகளை நான் ஒருநாளும் பறுவாய் பண்ணப் போவதேயில்லை. அந்த வழக்கம் எனக்கேயில்லை. ஏனெனில், நான் ஓர் துணிந்த கட்டை, எதற்குமே அஞ்சமாட்டேன்.

அத்தாட்சிகள் வேண்டுமா? எத்தனை வேண்டும்? உங்கள் ஆண்டவரையே ஓர் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய்விட்டு, இவ்வுலக இராச்சியங்களை யெல்லாம் உமக்குத் தருகிறேன்; என்முன்பாக விழுந்து என்னைக் குப்பிடுமென்று துணிந்துகேட்டவன் யார்? சாத்தானுகிய நான் அல்லவா? ஜெருசலேம்நகர தேவாலய சிகரத்தின் மேல் அவரை நிறுத்தி, கீழே குதிக்கும்படி நிமிர்ந்துகேட்டவன் யார்? இந்தச் சாத்தான் குட்டி அல்லவா? இந்தக்கல் அப்பமாகும்படி சொல்லுமென்று அவரையுமே சோதித்தவன் யார்? (நெஞ்சிலே ஒருதட்டுத் தட்டி) சாத்தான் என்ற இந்தவீரன் அல்லவா? சோதிக்கிறது என்வேலை. பரிசோதிக்கிறது உங்கள் வேலை.

இனி, நான்சொல்வதைத் தயவு செய்து ஒருகால் செவிசாய்த்துக் கேளுங்கள். நீங்கள் வெற்றிகரமாய் நடத்திய சமாகமத்தையும், ஞானோபதேச காட்சியையும் இப்ப நினைத்தாலும் என்வயிறு ஐயையோ! நெருப்பாய்ப் பற்றியெரிகிறது. இப்படியெல்லாம் நடத்துவீர்களென்று நான் அப்போதே அறிந்தால் எனது கெட்டித்தனத்தைக் காட்டி எல்லாத்தையும் தட்டிக்குழப்பி ஒருமுற்றுப்புள்ளி வைத்திருப்பேன். கைகடந்த காரியத்தைப்பற்றி இனிக் கனக்கக் கதைத்துத்தான் பலன் என்ன? போனது போகட்டும் இனியும் காலம் வருந்தானே, பொறுத்திருந்து பார்ப்போம்.

நிற்க, அடுத்தவரும் ஞாயிறு உங்களுக்கு ஏதோ மிஷன் ஞாயிறுமென்று அறியவந்ததும் ஆக்துப் பறந்து அங்கலாய்த்துக்கொண்டு ஓடோடியும் வந்திருக்கிறேன். இந்த மிஷன்ஞாயிறு ஏற்பட்டநாள்முதல் உங்கள் வேதம் உலகம் எங்கும் பரந்துவர வேண்டுமென்று என்னென்னவோ பாடெல்லாம் படுகின்றீர்கள். நானுமோ எங்கும் காற்றாய்ப் பறந்து உங்கள்வேதத்தைப் பரம்பவிடாது தடுக்கவும், இல்லை, அழிக்கவும் ஏதேதோ படாதபாடெல்லாம்பட்டு ஒருகை பார்த்துக் கொண்டுதான் வருகின்றேன். நான் உங்கள் வெற்றியைக் கண்டு ஒருகாலும் பின்வாங்கப்போவதுமில்லை. உங்கள் தோல்வியைக்காண உயிரை உயிர் பாராது உழையாமல்விடப் போவதுமில்லை.

உம் ... மிஷன் ஞாயிறு. உங்கள் வேதத்தைப் பரப்ப என்று ஆசை கொண்டு நீங்கள் செபஞ்செய்கிறீர்கள், தபம்பண்ணுகிறீர்கள், செபமாலை சொல்லுகிறீர்கள், பணம் கொடுக்கிறீர்கள், பிரசாரஞ் செய்கிறீர்கள். மெய்தான். ஆனால், எல்லாருமா? இல்லை, ஒருநாளும் இல்லை. மிஷன்ஞாயிறு... மிஷன்ஞாயிறு என்று எத்தனையோ பேரெல்லாம் முறுமுறுத்து, முணுமுணுத்து, மூக்கைச்சுளித்து. முகத்தைக் கறுக்கவைத்து, மிஷன் ஞாயிறன்று வேதப் பரப்புதலுக்கு என்று ஒருசெம்புச் சல்லிதானும் கைநீட்டிக் கொடாமல், ஒருசின்னச் செபந்தானும் சொல்லவிடாமல் துர்ப்புத்தி சொல்லிக் கொடுத்து, "வேதம் பரம்பாவிட்டால் என்ன" என்றுசொல்லிச் சோதனை உண்டுபண்ணி அவர்களை நான் மடுத்துவிட்டுக் கைகொட்டிக் கூத்துப் பார்க்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்களா?

குருமார், பிறதர்மார், சிஸ்றர்மார் ஆசிரியர் முதலானோர் சொன்னபுத்திமதியைக் கேட்டு, வேதப் பரப்புதலுக்கென நாங்களும் இயன்றளவு பணம் கொடுக்கத்தான் வேண்டும்; சற்றே தியாகஞ் செய்யத் தான் வேண்டும் என்று புத்தி பிறந்து, உணர்ச்சி வந்து எத்தனையோ பேர் மிஷன் ஞாயிறன்று கொண்டுபோய்ப்போடப் பணந் தேடி வைப்பார்கள். ஆனால், நான் தருணம்பார்த்து, அவர்கள் மனதைக் குழப்பி யடித்து அதற்குவேண்டும், இதற்கு வேண்டுமென்று அந்தப் பணத்தைக் கொண்டுபோய்ப் போடாமல் தந்திரம்பண்ணி ஏமாற்றிவிடுவேன். ஓடிப் போங்கள் படக்காட்சிக் கென்று பணத்தையுங் கொண்டு சிலரை நான் ஓடப்பண்ணியும் இருக்கிறேன். உண்மை அல்லஎன்றால் நெஞ்சிலேகையை வைத்துச் சொல்லுங்கள் பார்ப்போம்.

ஆனால், நல்ல பத்தியுள்ள—வேதாபிமானமுள்ள கத்தோலிக்கரும், அவர்களின் சுழந்தை குஞ்சுகளும் நான் என்னதான் இடித்திடித்துச் சொன்னாலும் சொல்வழி கேட்கிறார்களில்லை. இவர்கள் வேதப் பரப்புதலுக்காகச் செய்வதெல்லாம் எனக்குப் பொல்லாத மண்டைஇடியை உண்டுபண்ணுகின்றது. இவர்கள் வேதப் பரப்புதற் சபையிற் சேர்ந்து பணங் கொடுக்கிறார்கள். செபஞ் செய்கிறார்கள். அந்தச் சபையில் மற்றவர்களுஞ் சேரத் தூண்டி விடுகிறார்கள். திருப்பால சபையில் தங்கள் பிள்ளைகளையும் சேர்த்து விடுகிறார்கள். இவர்களை நினைக்க நினைக்க என் நெஞ்சம் புண்ணாகிறதே!

ஆனாலும் எனக்குத் தோல்வி என்று கனவிலும் நினைக்க வேண்டாம். வேண்டுமானால் அத்தாட்சி காண்பிக்கிறேன். இதோ! இந்தச் சபையில் ஆயிரம் பேருக்கு மேல் கூடியிருக்கிறீர்களே. உங்களில் விசுவாசப் பரப்புதல் சபையில் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? கையை உயர்த்துங்கள் பார்க்கலாம். அருமையான பிள்ளைகளே! உங்களில் திருப்பால சபையில் சேர்ந்தவர்கள் எத்தனைபேர்? கை உயர்த்துங்கள் பார்க்கலாம், உங்களில் விசுவாசப் பரப்புதலுக்காகத் தினமும் செபஞ் சொல்லி வருகிறவர்கள் எத்தனைபேர்? கைஉயர்த்துங்கள் பார்க்கலாம். ஹா... ஹ... ஏதோ நான் அறிந்ததைச் சொன்னேன். இனி உங்கள்பாடு பதினாயிரம்.

● மரியாயின்பிரான்சீஸ்கன் மிஷனரியசபையைச்சேர்ந்த ஒருதொகையான கன்னியாஸ்திரீமாரும், மற்றும் அநேகபெண்மணிகளும் இம்மாதம் 29-ந்திகதி லண்டனிலிருந்து றோமாபுரிக்குச்சென்று அங்கே பரிசுத்த தேவதாயாரின் இராக்கினித்துவதிருநாள் பிரகடனஞ்செய்யப்படும் திருவைபவத்திற்கும், தங்கள்சபையைச் சேர்ந்த ஆசா. மரிய அசுந்தாகன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம்அருளும் திருவைபவத்திற்கும் சமுகமளிக்கவிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்





தான் கரிசனையாக வளர்த்து வரும் அநாத பிள்ளைகளில் மூவரை ஓர் கன்னியாஸ்திரி ஓடியாடி விளையாடச் செய்கின்ருர்.

## நூறு பாஷைகளில்

நூறுபாஷைகளில் எழுதப்பெற்ற பிரியதத்தமந்திரத்தை அடக்கியபுத்தகம்ஒன்று ரோமாபுரியிலுள்ள ஆங்கில குருமடத்தில் வேதசாஸ்திரம் படித்துவருகின்ற குருத்துவமாணவர்களால் சங்கிரகஞ்செய்து இங்கிலாந்திலே வால்சிங்காமிலுள்ள தேவமாதாவின் பேரான திருசேத்திரத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. மரியாயின் புனிதவருடத்தை முன்னிட்டுச் சமீபத்தில் நடைபெற்ற கல்லூரி யாத்திரையின்போது, இந்தப் புத்தகம் குருத்துவமாணவர்கள் பேரால் பேர்மிங்காம்நகர கிறிம்ஷோ அதிமேற்றிராணியாராலே சங்மானிக்கப் படலாயிற்று. இந்தயாத்திரையில் 22 குருமாரும், 12குருத்துவமாணவர்களும் கலந்துகொண்டார்கள்.

## மனந்திரும்பிய சீனப்பிரமுகர்

கீர்த்திவாய்ந்த சீனச் சட்டசாஸ்திரநிபுணரும், இராசியதூதுவரும், எழுத்தாளரும், சர்வகலாசாலைப் பேராசிரியருமான டக்றர் ஜோண் சி. எச். யூ. அவர்கள் சிலகாலத்தின்முன் மனந்திரும்பிக் கத்தோலிக்கரானபோது, லிசியேபதி அர்ச். சின்னத் தெரேசம்மாள்பேரில் ஓர்புத்தகம் எழுதியிருந்தார். தமது மனந்திரும்புதல் விஷயமாய் அர்ச். தெரேசம்மாளுக்குத் தாம்பெரிதும் கடமைப்பட்டவரென இவர் எப்போதுமே சொல்லிக் கொள்ளுகின்ருர். இந்நூலை அறிஞர்கள்பலரும் புகழ்ந்து பாராட்டியிருக்கின்றனர். தற்போது இந்தச்சீன அறிஞர் "உள்ளரங்க கார்மேல் சபை"என்ற மற்ரேர் புத்தகம் எழுதியிருக்கின்ருர். இது கிறீஸ்துவ ஞானவாழ்க்கை பற்றி எழுதப்பட்டுள்ளது. அர்ச்சியசிட்டர்களின்—விசேஷமாய் அர்ச். சிலுவை அருளப்பரின் ஞான போதகங்களைப்பற்றி இவர்செய்துள்ள ஞானத்தியானங்களினல் ஏற்பட்டபலனே இதில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

## மரியாயின்சேனைத் தலைவர்

சீனுவிலே மரியாயின்சேனைத் தலைவராயிருந்துவந்த வண. எயிடன் மைக்கிறாத் சுவாமியார் அங்குகம்யூனிஸ்தர்களால் மூன்று வருடகாலம் சிறைவைக்கப்பட்டிருந்தபின் விடுதலையடைந்து தமதுசொந்தநாடாகிய அயர்லாந்துக்குச் சமீபத்தில் திரும்பியபோது, அந்நாட்டின் ஜனதிபதியான திரு. சீன் ஒ' கெல்லி அவர்களும், பிரபலதிருச்சபைக் குருசிரேஷ்டர்களும், பிரமுகர்களும், மூவாயிரவருக்குமேற்பட்ட மரியாயின்சேனை அங்கத்தவர்களும் ஆடம்பரமான ஓர்வரவேற்பு அளித்துத் தங்கள்நாட்டின் வீரத்துவபுதல்வரில் ஒருவரான அவரைக் கௌரவப்படுத்தினர்கள். டபிளின்நகர தேசியஸ்ரேடியத்தில் நடைபெற்ற இந்தவரவேற்பிலே அயர்லாந்தில் பாப்பரசரின் ஸ்தானிகராயிருந்து சமீபத்தில்இளைப்பாறியஒ'ஹறு அதிமேற்றிராணியார், பிரதமர் கொஸ்ரெல்லோ, லிஸ்ரன் அதிமேற்றிராணியார், முன்னாள் பிரதமர் டிவலேரு, டபிளின்நகர லோட்மேயர் ஆகியோர் பேச்சாளராயிருந்தார்கள். வண. மைக்கிறாத் சுவாமியார் மரியாயின்சேனையை விருத்திசெய்வதற்கென 1930-ம் ஆண்டு சீனவுக்கு அனுப்பிவைக்கப்பெற்ருர். கம்யூனிஸ்த சிறைச்சாலையில் நீண்டகாலம் அடைக்கப்பட்டிருந்தபின் சென்ற வைகாசிமாதம் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

## புரொட்டஸ்தாந்தரின் யாத்திரை

இங்கிலாந்திலே ஹெப்பேண் நகர் வாசியும், ஓர்புரொட்டஸ்தாந்தருமான திரு. வில்லியம் மேர்டேஎன்பவர் ஓர்முடவர். 46வயதுடையவர். இவர் சமீபத்திலே அங்கிருந்து லூர்துதிருப்பதிக்கு முச்சக்கரங்களையுடையதாய் இயக்கிச்செல்லும் தமது சில்லுவண்டியிலே யாத்திரையாகப் புறப்பட்டிருக்கின்ருர். இவரே தனதுவண்டியை இயக்கிக்கொண்டு தனிமையாகச்செல்லுகின்ருர். லூர்துபதிக்குச் சென்று திரும்ப இவர் நடத்தவிருக்கும் பயணதூரம் ஆயிரம்மைல். கடந்த பத்துவருடகாலமாக இவர் ஓர்முடவராய் இருந்துவருகின்ருர். "லூர்துபதியில் நான் சுகமடைய முடியுமென்பதில் நான்எப்போதுமே மிகுந்தநம்பிக்கையுடையவனய் இருந்துவருகிறே"னென்று இவர் யாத்திரை புறப்படும்போது கூறிச்சென்ருர். நாளொன்றுக்கு 40 மைல்தூரம் பிரயாணஞ்செய்ய இவர்திட்டமிட்டிருக்கின்ருர்.

## அமெரிக்க தேசீய செபதினம்

அமெரிக்க ஐக்கியதேசமக்கள் சென்ற புரட்டாசிமாதம் 15-ந்திகதி புதன்கிழமையை ஓர் தேசீய செபநாளாகக் கொண்டாடினர்கள். அதனை ஓர் தேசீய செபநாளாக்கி அமெரிக்க ஜனதிபதி ஐஸன்ஹாவர் அவர்கள் செய்த பிரகடனத்திலே, "பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக நாமெல்லாம் கடவுளுக்கு நன்றித்துதி சமர்ப்பித்து, உலக சமாதானத்துக்காக நாம்செய்துவரும் முயற்சிகளில் நம்மைப்பலப்படுத்துமாறு அவருடைய அனுக்கிரகத்தை இரந்து கொள்வோமாக" எனக் கேட்டுக் கொண்டார். அமெரிக்கமக்கள் செபத்தினலும், தியானத்தினலும் கடவுள்பக்கமாகத் திரும்பக்கூடியதாக வருடந்தோறும் ஞாயிற்றுக்கிழமையல்லாத ஓர்தகுதியான நாளைத் தேசீயசெபநாளாக ஜனதிபதியவர்கள் தெரிந்து பிரகடனஞ் செய்யவேண்டுமென்றும், அதனல் அவர்கள்அனைவரும் தேவபராமரிக்கையிலும், செபத்தின் வல்லமையிலும் தங்களுக்குள்ள நம்பிக்கையை மீட்டும்உறுதிப்படுத்தி வருடந்தோறும் ஓர் குறித்தநாளிலே செபத்தில் ஐக்கியப்படவேண்டுமென்றும் 1902-ம் ஆண்டு சித்திரை 17-ந்திகதியன்று அமெரிக்கபாராளுமன்றத்தில் ஓர்பிரேரணை அரங்கேற்றப்படலாயிற்று. அதன் பேரிலேயே இந்தத்தேசிய செபநாள் கொண்டாடப்படலாயிற்று.

## பாப்பரசரின் பேட்டிகள்

டக்றர்மார்கூறிய ஆலோசனையின்பேரிலே பரிசுத்தபாப்பரசர் தமதுவழமையான முழு அலுவல்திட்டத்தையும கொண்டுநடத்துவதை நிறுத்திவிட்டிருக்கின்ருர். ஆயினும் ரோமாபுரியில் பூமிசம்பந்தமாக நடைபெற்ற மகாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த சுமார் 1,500 விஞ்ஞானிகளுக்கு அன்றுவெள்ளிக்கிழமைநணபகல் பேட்டியளித்து 35 நிமிஷம்வரையில் சொற்பொழிவாற்றினர். இது பிரான்சியபாஷையிலே 2,000 சொற்களைக்கொண்டதாய் அவரால் எழுதி வாசிக்கப்படலாயிற்று. அடுத்த ஞாயிற்றுக்கிழமை யாத்திரிகர்கள் குழுவொன்றைவரவேற்று ஆங்கில, இத்தாலிய, ஜேர்மனிய, பிரான்சிய, ஸ்பானியபாஷைகளில் பேசினர். பிந்தத் தமது வேனிற்காலமாளிகையின் மேல்மாடியில்நின்று பதினயிரம்யாத்திரிகர்களை ஆசீர்வதித்தார்.

## லத்த. உடன். கருதினல்

ரோமாபுரியிலே இம்மாதம்4-ந்திகதியன்று காத்திராப்பிரகாரம் காலஞ்சென்றவரான கருதினல் பிரான்சிஸ்கோ தூகா ஆண்டவரே இற்றைக்கு 25வருடங்களின்முன் இத்தாலிக்கும், வத்திக்கானுக்குமிடையில் நடந்தேறிய லத்தறன்உடன்படிக்கைக்குப் பரிசுத்தஸ்தானத்தினிடமாகக் கைச்சாத்திட்டு, இத்தாலிய அரசாங்கத்தினிடமாகப் பாப்பரசரின் முதல்ஸ்தானீகராயினர். இவரின் மரணத்தோடு, 1953-ம் ஆண்டு முழு அங்கத்தவர்களையும் கொண்டதாய்ப் பூரணமாக்கப்பெற்ற கருதினல்மார் திருச்சங்கத்தில் மூன்றுஸ்தானங்கள் இன்று காலியாய் இருக்கின்றன. இவருக்குமுன் கருதினல் மஸ்லிம்ஆண்டவர் சென்றபங்குனியிலும், கருதினல் சூஸ்தர் ஆண்டவர் சென்றபுரட்டாசியிலும் காலஞ்செல்லலாயினர். ரோமானியபிணக்கைத் தீர்க்கும் விஷயமாய் இத்தாலியஅரசாங்கத்துடன் நடைபெற்ற சமரசப் பேச்சுகள் நடந்துவந்த காலமுழுவதும் வத்திக்கான்இராச்சிய மந்திரிகாரியாலயத்தில் ஓர் அதிகாரியாயிருந்தஇவர் தமது பதவியைக்கொண்டு உடன்படிக்கைக்குக் கைச்சாத்திட்டவர்களில் ஒருவராயினர். இவர் ஓர் வேதசாஸ்திர பண்டிதரும், பேராசிரியரும், சிறந்தபிரசங்கியாருமாவர். கருதினல் ஸ்றிற்ச், கருதினல் கில்ரேய், கருதினல் ஸ்பெல்மன் ஆகியமூவரும் இவரின் பழையமாணவர்கள்.

## பிரமாண்டமான ஞானப்பூச்செண்டு

பரிசுத்த பாப்பரசர் மரியாயின்சபைகளில் சேர்ந்துகொண்ட அறுபதாம்ஆண்டின் ஞாபகார்த்தமாகச் சமீபத்திலே உலகமுழுவதிலுமிருந்துபோய் ரோமாபுரியில் மகாநாடுகூடிய மரியாயின்சபைகளின் சாதாரண கத்தோலிக்கபிரதிநிதிகள் சம்பேதுருவானவர் மகாலயத்திலே அவரது சிம்மாசனத்தின் முன்பாகச் சென்று முழந்தாட்படியிட்டுப் பலதெட்சணைகளை அவருக்குச் சமர்ப்பித்தார்கள். அவற்றிலே, பாப்பரசரது மரியாயின் புனிதவருட கருத்துகள் மூன்றினுக்குமாக அச்சபைகளின் அங்கத்தவர்களான 80லட்சம்பேர்களின் செபங்களாகிய பிரமாண்டமான ஓர் ஞானப்பூச்செண்டை அடக்கிய கலசமும்ஒன்ருகும். இந்த மகாநாட்டைத் திறந்துவைப்பதற்காகப் பரிசுத்தபிதா காஸ்தெல் கான்டல்போவிலுள்ள தமதுவேனிற்கால மாளிகையிலிருந்து வத்திக்கானுக்குத் திரும்பியிருந்தார். அவர் சம்பேதுருவானவர் மகாலயத்துள் பிரவேசித்தபோது யாத்திரிகர்களும், பிரதிநிதிகளுமாக 25,000 பேர் குழுமியிருந்து அவரைவாழ்த்தினர்கள்.

● ஐரிஷ்கடலிலே அதிகதூரத்தில் வருகின்ற கப்பல்களுக்கு வழிகாட்டும்படியாக லொஸ்லேயர் குன்றின்மீது தேவதாயாரின் பாரியமாபிள்கல் சுரூபம்ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இராக்காலத்திலே இதுதீபாலங்காரஞ் செய்யப்பெற்றுக் கப்பல்களை வழிநடத்திவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி மாதம்

போதுக்கருத்து:— சிறுவர்களிடம் இளம்பிராயத்திலிருந்தே மெய்யான கிறீஸ்தவமனச்சாட்சி உருவாகும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— வேதபோதக நாடுகளிலே குருத்துவ அழைத்தல் எண்ணிக்கையிலும், தரத்திலும் உயரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
ஐப்பசி மாதம் 21-ந் திகதி



## மரியாயின் சமாகமமும் நமது ஆயரும்

குறிப்பு: நம்முடைய மேற்றிராணியாண்டவர் அவர்கள் சமாகமத்துக்கென அனுப்பிய பிதாவுக்குரிய நன்மதிகள் எதிர்பாராதகாரணங்களின்நிமித்தம் சற்றே பிந்திக் கிடைக்கலாயின. மரியாயின் சமாகமம் முடிவடைந்தபோதிலும் அவரது நன்மதிகள் புதியனவும், கவர்ச்சிகரமுமானவைகள்.

அமெரிக்க ஐக்கியதேசம்,
நியூ ஜேர்ஸி.

**கிறீஸ்துவில் நமக்கு மிகவும்பிரியமான பிள்ளைகளே!**

நாம் உங்களைவிட்டுப் பிரிந்து கடலிலும், தரையிலும் கடக்க வேண்டிய அநேகாயிரம் மைல்களுக்கப்பால் இருந்தபோதிலும், எம்மெல்லோருடையவும் தாயாரின் பாதத்தடியில் ஒன்றுகூடியிருக்கும் உங்களுடன் நாமும் மனதினல் கூடவிருக்கின்ரோம். நாம் இங்கு செலவழிக்கும் ஒவ்வொரு விநாடியையும் யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த நமது அருமைப் பிள்ளைகளுக்காகவும், நமது மிகவும் அருமையான குருமாருக்காகவுமே ஒப்புக்கொடுக்கிரோம்.

இவ்வளவு பக்தியுடனும், ஆர்வத்துடனும் நீங்கள் நடாத்தும் ஞானோபதேசக்காட்சியும், சமாசமமும் இவ்வருடம் முழுவதும் எமது அமலோற்பவஇராக்கினியின்பேரால் நீங்கள் நடாத்திய பக்திமுயற்சிகளுக்கு ஓர் முடிசூட்டியதுபோல் இருக்கின்றன. நமது மேற்றிராசனத்தைப் பரிசுத்ததேவ்தாயார் விசேஷவிதமாய் ஆசீர்வதித்திருக்கிரார்என்று பெருமையுடன் கூறுகிரோம். இவ்வருடத்திலே நமது பிள்ளைகள் தேவதாயாருக்குத் தங்கள் அன்பையும், பக்தியையுங்காட்டுவதிலே கொண்ட ஆர்வத்தைப்பற்றி அறியவந்தது நமக்குப் பேரானந்தத்தையும் ஆறுதலையும் தந்தது.

மரியாயின்வருட வரங்கள் உங்களுக்கு மாரியாய்ப் பொழியப்பட்டதையிட்டு நாம் சந்தோஷமடைகிரோம். இந்த மரியாயின்வருடம் நமதுமேற்றிராசனத்திலுள்ள மக்களின் மனதிலே எங்கள்தாயார்பேரில் நேசமும், பக்திபற்றுதலும் ஆழமாய் வேரூன்றச் செய்திருக்குமென நம்புகிரோம்.

நமது திருமுகத்திலே நாம் முன்னர் கேட்டுக்கொண்டதுபோல, எல்லா இல்லங்களிலும் குடும்பசெபமாலைப் பக்தி அனுசரிப்பதே நமது மேற்றிராசனத்தில் மரியாயின்வருடத்தினதும், அதற்குரிய கொண்டாட்டங்களினதும் அழியாத ஞாபகார்த்தமாய் இருக்கவேண்டும்.

அமலோற்பவதாயார் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்

## OUR BISHOP AND THE MARIAN RALLY

N.B.—Owing to unforeseen circumstances the paternal message of of our Bishop has reached us rather late. Though the Rally day is passed, the message has its own freshness and appeal.

*New Jersey, U.S.A.*

My Dear Children in Christ,

Though separated in body by thousands of miles of land and sea, in spirit We feel one with you all gathered at the feet of Our Common Mother. Every moment we spend here is offered up for our dear children and our dear Priests of Jaffna.


The Exhibition and Rally in which you all participate with such fervour and enthusiasm come as a climax to an year of devotions in honour of our Immaculate Queen. Our Diocese—we are proud to state—has been singularly blessed by our Blessed Mother. During this year great was our joy and consolation to see our children vying with each other to show Her their love and devotion.

We are so happy that the Graces of the Marian Year have been showered on you; and we are confident that this Marian Year has been to our Diocese an year in which love, attachment and devotion to our Mother has struck deeper roots in our hearts.

As We requested you earlier in our Pastoral Letter let the FAMILY ROSARY in all our homes be the lasting monument in our Diocese of the Marian Year and of these celebrations in common.

May the Immaculate Mother bless you and keep you.

✠ J. EmilianusPillai, O.M.I.,
Bishop of Jaffna.



மரியாயின் சமாகம சுபதினமன்று காலை 6-30 மணிக்குச் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலே கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டவர்அவர்களால் இந்த அலங்காரமான பலிபீடத்தில்தான் சமாகம திவ்விய பூசை நிறைவேறியது. பண்டத்தெருப்புப் பாத்திமாகிரியில் எழுந்தருளியிருக்கும் பரிசுத்த பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் பலிபீடத்தின்மேலாகக் காட்சியளிக்கின்றது.

### அடுத்த 24-10-54 ஞாயிறு
### விசுவாசப் பரப்புதல் ஞாயிறு

நீங்கள் செல்வர்களா? விசுவாசப் பரப்புதலுக்கென்று அதிகம் கொடுங்கள். உங்கள் நிலைபரத்துக்குத் தக்கதாகக் கொடுங்கள். உங்களிடம் கேட்கிறவர் யார் என்பதை உள்ளபடியே நீங்கள் உணர்ந்தால் அதிகம் கொடுப்பீர்கள். "அப்பொழுது பரலோகத்திலே உங்களுக்குப் பொக்ஷம் உண்டாயிருக்கும்" என்பதை மறவாதீர்கள்.

## செபமாலைத் தாய்

நாம் சிறு குழந்தைகளாய் இருந்தகாலத்திலே நடந்தசம்பவங்கள் இப்போது நம்முடைய ஞாபகத்தில்இல்லை. ஆனல், தங்கள்குழந்தைகள்மட்டிலே தாய்மார் புழங்கிக்கொள்ளும் வகையை நாம்அறிவோம். அவர்களைச் சீராட்டித் தாலாட்டிக் குளிப்பாட்டிநெஞ்சோடணைத்து அன்புபாராட்டுந் தருணத்தில் — மா — ம்மா — அம்மாஎன்று எழுத்துஎழுத்தாய், சொல்லுச் சொல்லாய்த் தாய்மார் அவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதை நாம்கவனித்திருக்கிரோம் அல்லவா! பச்சைப்பாலர் விருவறியும் காலத்தின் முன்னர்தானே தங்கள் மழலைமொழிகளால் தங்களைத் தாயேஎன்றுஅழைக்கவும், அங்கீகரிக்கவும்,அன்புபாராட்டவும் வேண்டுமென்னும் ஆசையினலன்ரோ தாய்மார் இப்படிச் செய்கிரூர்கள். இந்த ஆசையும், ஆர்வமும் தாய்மாருக்கு இயற்கையிலேயே உள்ளன. அம்மா என்னும் சொல்லை முற்றமுடியச் சொல் [illegible] ஓர் தாய்க்குண்டாகும் ஆனந்தம் இம்மட்டென்று நாவினல் வருணிக்கவியலாது. அம்மாஎன்றுசொல்லக்கேட்டதும் பலதரம் அவள் தனது குழந்தையை அரவணைப்பாள். ஆயிரந்தரம் முத்தமிடுவாள். ஆனந்தம்பொங்குவாள். தாய்மாருக்குள்ள இந்தக்குணம் நமது பரலோகஅன்னையிலும் காணப்படுவது ஒரு அதிசயமாகுமா?

ஆதித்தாய் தந்தையர் பாவஞ் செய்த அன்றுதானே இந்தத் தாய் உலகின் இரட்சகியாகவாக்குப்பண்ணப்பட்டா. அன்றே நமது ஞானத்தாயானு. சகல ஞான நன்மைகளுக்கும் காரணியானு. இரட்சிக்கப்படுவார் எல்லோரும் அவமூலமாகவே இரட்சிக்கப்பட வேண்டுமென்பது தேவசித்தமாயிற்று. எங்கள் சீவமே வாழ்க!

மனுக்குல இரட்சணியத்தின் மூலகாரணராகியயேசுக்கிறீஸ்துநாதர் இந்தத் திருத்தாயார்வழியாகவே பிறந்தார். அத்தாயாரின் நிழலிலேயே வளர்ந்தார். தமது பாலிய, வாலிப காலமுழுவதையும் கழித்தார். இவைமாத்திரமா? அவரது பிரசித்த சீவியகாலத்திலும் எவ்வித அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாய்ப்புடன் நிழலானது ஒருவரைத் தொடர்ந்து செல்வதுபோல அவருடைய திருஅன்னையாரும் அவரைமுன்னும்பின்னும் தொடர்ந்தபடியே இருந்தா. ஈற்றில் தமது திருக்குமாரன் சிலுவையைச் சுமந்துசெல்ல, தாயாரும் பின்னுல் சிலுவையைச் சுமவாமல்சுமந்தபான்மையாய்ச் சுமந்துசென்றதை நாம் அறியோமா? கல்வாரிமலையை அணுகியகுமாரன் பலஉபத்திரவங்கள்மத்தியிலே சிலுவையில் தொங்க, தாயார் அவரைப் பார்த்துநின்று தயங்கினர். சிலுவையில் தொங்கிய குமாரன் தாயைப் பார்த்தார். இந்தஅந்தியவேளையிலே மகன்தாய்க்குச் செய்யக்கூடிய மரணசாதனம்என்ன? இதோ உன்குமாரன்என்று யுவானியாரைக் காண்பித்து, யுவானியாரின்மூலமாக மனுமக்கள் யாவரையும் தாயார்வசம் ஒப்படைத்தார். தாயாரும் எங்களைத் தமதுவசம் ஏற்றுக்கொண்டா. அன்றுமுதல் அவ பாவிகளின் தஞ்சமானு. **எங்கள் தஞ்சமே வாழ்க!**

எங்கள்வாழ்க்கை ஒருநாள் முடியும. மோட்சம் எஙகள்சம்பாவனையாகவேண்டும். ஞானசோதிசள், புண்ணியவாளர் புடைசூழ்ந்துநிற்க மகிமைச்சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஞானஆட்சியைச் செலுத்திவரும எங்கள் இரட்சகரை அண்ணுந்து பார்ப்போமானல். அவர்பக்கத்தில் ஓர் திருச்சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எமதுபரலோக தாயாரைக் காண்போம். இந்த ஞானத்தாய் தமதுபிரமாணிக்கமுள்ள மக்கள் அனைவருக்கும் ஞானஇன்பஞ்சுரக்கும் ஞானமதுரச்சுனை என்றல்லவோ அழைக்கப்படுகிரு. **எங்கள் மதுரமே வாழ்க!**

எங்கள் சீவியமும், மதுரமும் இன்பமுமாகிய பரலோகஇராச்சியத்தை எங்களுக்குப்பெற்றுத்தர ஆவலாயிருக்கும் மோட்சஇராக்கினியானவ இப்பூவுலகமண்ணில் உதிக்கப் பெற்றெடுத்த நம்மால்தாயைப்போல் நேசிக்கப்படவும், அன்பானமொழிகளால் அழைத்துத் துதிக்கப்படவும் ஆவலுள்ளவவாய் இருக்கின்ரு. இந்தத் தமதுஆவல் எவ்வளவு அதிகமென்று காண்பிக்க அவ எடுத்துக்கொண்ட உபாயங்கள்தான் எவ்வளவு! ஆபத்தில்உட்பட்ட பகுத்தறிவற்றகிளி "ஆவே மரியா" என்னும் வாழ்த்துப்பாட்டினை மும்முறைஉச்சரித்ததும் அதைத் தீண்டவந்த பருந்து கீழேவிழுந்து உயிர்துறந்ததென்பதை நாம் அறிவோம். தேவதாயார் தரிசனையளித்த லூர்துகெபியிலும், பாத்தியாபதியிலும் தாமேதமது திருக்கரத்தில் செபமாலையை எடுத்துக்காண்பித்துத் தாமுங்கூடச் செபமாலை ஓதினுவல்லவா? இவைகளிலிருந்து தாயே திருச்செபமாலை உமக்கு எவ்வளவு உகந்த செபமென்றும் காண்பித்திருக்கிறீர் அல்லவா? இச்செபத்தை நாம் பக்திபற்றுதலுடன் அடிக்கடி சொல்லிவர உமதுவரம் தர்தருளும் தாயே!

— J. A. R.



பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கிளிநொச்சிக் கத்தோலிக்க கமப்பாடசாலைக்கு அத்திவாரக்கல் நாட்டி, அது அமைக்கப்பட விருக்கும் காட்டிலே முதன்முதலாக ஓர்காட்டு மாத்தை வெட்டுமாறு கோடரி ஒன்றைக் கிளிநொச்சிப் பங்குக்குரவர் வண. ஜே. சி. செல்வரட்ணம் சுவாமிகளிடமிருந்து கையில்வாங்க ஆயத்தப்படுகிரு்.

## அடுத்த 24-10-54

## விசுவாசப்பரப்புதல் ஞாயிறு

நீங்கள் ஏழைகளா? வேதப் பரப்புதலுக்குக் கொடுக்க உங்களிடம் அதிக பணம் இல்லையா? நல்லது. சுவிசேஷத்திலே சொல்லப் படும் அந்த ஏழைவிதவையை நினையுங்கள். அவள் காணிக்கைப் பெட்டியில் இரண்டு பித்தளைச் சல்லிகளே போட்டாள். ஆயினும், அவள் தனது சீவனத்துக் கென்று வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டாள். அவள் போட்ட அற்ப காணிக்கையைப் பார்த்துக் கொண்டு இருந்த திவ்விய யேசு அவளுடைய காணிக்கையைப் புகழ்ந்து கொண்டார். ஐசுவரியவான்கள் மிகுதியாய்ப் போட்டதிலும் அந்த ஏழைக் கைம்பெண் அதிகமாகப் போட்டாள் என்று அவரே வசனித்தார்.



### 9-ம் பத்திநாத பாப்பானவரும் முத்திப்பேறுபெற்ற பட்டமும்

மரியம்மாள் மாசில்லாமல் உற்பவித்தாளென்று பிரகடனம்செய்த பாப்பாசருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டப்படுவதைக்காணக் கத்தோலிக்க உலகமுழுவதும் ஆவலோடு எதிர்பார்க்கிறது. மரியாய் இந்தஒப்பில்லாச் சலுகைக் கிலக்கானவளென்று நிர்ணயித்தபாப்பானவரை ஒவ்வொருகிறீஸ்தவனும் மகிமைப்படுத்த வேண்டுமென்று அகிலஉலகமும ஆசிக்கின்றது.

மரியாயின் புனிதவருடத்தில் வாழும் பாக்கியம் நமக்குக்கிடைத்திருக்கிறது. எல்லோராலும் சங்கிக்கப்பட்ட 9-ம் பத்திநாத பாப்பானவருக்கு இப்புனித வருடத்தில் முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டப்படுதல் எவ்வளவுசந்தோஷகரமான சம்பவம்! "யேசுநாதரைத் தாங்கிய ஒரேயொரு மாசில்லாதஉதரம்" என்று வழுவாவரத்துடன் மரியாயை வாழ்த்திய பாப்பானவருக்கு மரியாயின் இப்புனிதவருடம் முடியுமுன்னரே முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டப்படுதல் [illegible] கிடைத்தல் சாலவும்பொருத்தமுடையதாகும்.

இவரைப்பற்றி அர்ச் 10-ம பத்திநாத பாப்பானவர்கூறியது இங்கே குறிப்பிடத்தக்கது. "9-ம பத்திநாத பாப்பானவர் தேவனின் பெரியதிருத்தொண்டர். இவர் தேவசம்பந்தமான புண்ணியங்களுக்குப், சரீரசம்பந்தமான புண்ணியங்களுக்கும் ஓர்உத்தம மேல்வரிச்சட்டமாக வைக்கப்படத் தக்கவர்."

9-ம் பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டுவதைப்பற்றிப் பெரியஆரவாரங்கள் நடைபெறுகின்றன.

9-ம் பத்திநாதபாப்பானவர் மரித்த அதேநேரத்தில் அவரிடம் சலுகை கேட்டு மரணத்தறுவாயிலிருந்த ஒரு பெல்ஜியப்பையன் உடனே பூரண சுகம்பெற்றுன். இது ஒரு உடன் நிகழ்ச்சி என்பீர்களாக்கும். ஆனுல், தேவபராமரிப்பின் அதிசயங்கள் எல்லாம் உடனிகழ்ச்சிகள் அல்லாமல் வேறென்ன?

1870-ம் ஆண்டின் கடைசியிலே ஒருநாள் அதிகாலையில் தக்கஉடை அணிந்த ஒருமாது வத்திக்கான்மாளிகைக்குள் பிரவேசித்துப் பாப்பானவரோடு அவசியம்பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அங்குள்ளோர் அது உகப்பானநேரமல்லவென்று எவ்வளவோசொல்லியும், அவளோ அவசியங் காணவேண்டுமென்று பிடிவாதமாக நின்ருள். அவளது பிடிவாதத்துக்கிணங்கி ஒரு கருமகாரன் அவளதுகோரிக்கையைப் பரிசுத்தபிதாவுக்கு அறிவித்தான். அப்போதே திவ்வியபூசைமுடித்துப் பாப்பானவர் தமது சிற்ருலயத்திற் செபஞ்செய்துகொண்டிருந்தார்.

"பரிசுத்தபிதாவே! கறுப்புஉடை தரித்த ஒருமாது அவசியமாகத் தங்களைக் காணவேண்டுமென்று விரும்புகிருள்" என்ருன்.

"மரித்தவர்களோடு நாம் பேசுவதில்லை" என்று பாப்பானவர் சாந்தமாகப் பதில்கொடுத்தார்.

தான்சொன்னது பாப்பானவருக்குக் கேட்கவில்லையென எண்ணிய அந்த அலுவலாள் சற்று உரத்ததொனியில்: "பரிசுத்தபிதாவே! ஒருமாது உடனே தானே தங்களைப்பேட்டிகாண விரும்புகிருள்" என்ருன்.

9-ம் பத்திநாதபாப்பானவர் அவனை ஏறெடுத்துப்பார்த்து: "மரித்தவர்களோடு நாம் பேசுவதில்லை" என்று தெளிவாகக்கூறினுர்.

ஏவலாள் இவ்விதஅசம்பாவித மறுமொழியைக் கேட்டுச் சற்றுத்திகில் அடைந்து அந்தமாதுஇருந்த அறைக்குத் திரும்பிப்போனுன் அங்கே "கறுப்புஉடை தரித்திருந்த மாது" பிரேதமாகக் கிடக்கக்கணடு பிரமித்தான்.

காவலாளர் பரிசோதனை செய்தபோது: "கறுப்புடைதரித்த அந்த மாது" ஒருமனிதனெனக் கண்டார்கள். அவன் தரித்திருந்த ஆடைகளுக்குள் ஓர்கூரிய இடைவாள் இருந்தது. அக்கொலைபாதகனின் வாளுக்கிரையாகாது இரக்கமுள்ள தேவனின்கரம் பாப்பானவரைப் பாதுகாத்தது.

சிலகருதினுல்மாரோடு ஒருநாள் ஒருகூட்டம நடைபெறவிருந்தது. பாப்பானவர் தமதுசிற்றுலயத்துக்குக் கிட்டவுள்ள ஒருஅறையில் கூட்டம் நடத்தத் தீர்மானித்தார் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் அங்கிருந்தஎல்லோருக்கும் ஒருநூதனசத்தங் கேட்டது. சத்தம்வந்ததிசையை நோக்கி எல்லோரும் பார்த்தார்கள். ஒன்றுந் தெரியவில்லை ஆனல், உடனேதானே அவர்கள் கூடியிருந்த அறையின்தளம் விட்டுக்கொடுத்தது.

"மாசில்லாதமாதாவே! எங்களைக் காப்பாற்றும்" என்றசொற்கள் பாப்பானவரின் வாயிலிருந்து பிறந்தன. காவலாளர் ஓடிசசென்ருர்கள். பல கருதினுல்மார் காயமடைந்திருக்கக் கண்டார்கள். ஆனல், பாப்பானவருக்கோ ஒருசிறுகாயமும் இல்லை. மாசில்லாத மாதாவுக்கு நன்றித்துதி செலுத்தினுர்கள்.

இத்தகைய மகா பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டஞ் சூட்டுதல சாலவும்பொருந்துமன்ரே!

### சில்வேஸ்தரின் நைற்பட்டம்

குருணுகலைச்சேர்ந்த காலங்கண்ட வழக்கறிஞரான திரு. சி. எல். டபிள்யு. பெரேரு அவர்கள் பரிசுத்த பாப்பரசராலே அர்ச். சில்வேஸ்தரின் நைற்பட்டம்அருளிச் சங்மானிக்கப்பெற்றிருக்கின்ருர். இப்பட்டம்வழங்கும் வைபவத்தைச் சலாபமேற்றிராணியாராகிய மகாவந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டவர் அவர்கள் குருணுகல், அர்ச். அன்னம்மாள்ஆலயத்திலே இம்மாதம் 31-ந் திகதியன்று நடத்திவைப்பார். புதிய நைற்பட்டவர்த்தனரான செவாலியர் பெரேரு அவர்கள் ஏறக்குறைய 40ஆண்டுகளாகக் கததோலிக்கசேவை சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்ருர். ஓர் வழக்கறிஞர் என்றமட்டிலே சட்டசாஸ்திரசம்பந்தமாய் அருமையானநூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்ருர். தற்போது 64 வயதுடையவரான இவர் முப்பது வருடங்களுக்குமேல் குருணுகல் நீதிமன்றங்களில் கடமைபார்த்துவந்திருப்பதுடன். ஓர்சமூகதொண்டராகவும் விளங்கிவந்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்



இந்தச் சிறு பிள்ளைகள் இருவரும் வேதப் பரப்புதலுக்காகச் சிறு சிறு செபங்கள் செய்து திவ்விய பாலக யேசுவுக்கு ஒரு செபப் பூச்செண்டு காணிக்கை வைக்கிறார்கள்.

[நத்தால் படங்கள்]



## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

அடுத்த ஞாயிறு விசுவாசப் பரப்புதல் ஞாயிறு என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அன்று நாம் எல்லோரும் எம்முடைய திருவேதத்தைப் பரவச் செய்வது எமது கடமை என்பதை நினைக்க வேண்டிய தினம்.

திருச்சபை எப்படிப் பரம்புகிறது என்றும், அது பரவுகிறதற்கு நாம் என்ன செய்யலாம் என்றும் ஞானோபதேசக் காட்சியில் கண்டீர்கள் அல்லவா? ஒவ்வொரு கிறீஸ்தவனும் ஒரு வேத விருத்தியாளனாய் இருக்க வேண்டும்.

பர்மா அரசாங்கம் இவ்வருடம் நல்லுறவுக் கோஷ்டி ஒன்றை ரோமைக்குப் பரிசுத்த பாப்பரசரிடம் அனுப்பியது உங்களுக்குத் தெரியுமா? அந்தக் கோஷ்டியில் கத்தோலிக்க குருமாரும், விரத்தர்மாரும் இருந்தார்கள். இவர்களுடைய செலவு ரோமையில் பெரிய ஆரவாரத்தை உண்டுபண்ணியது. ஏனெனில், உலகத்திலுள்ள எந்த நாட்டிலிருந்தாவது உத்தியோக தோரணையில் கத்தோலிக்க குருமாரைக் கொண்ட ஓர் தூதுக் கோஷ்டி ரோமைக்குச் செல்லவில்லை. அந்தப் பெருமையைப் பர்மா அரசாங்கம் ஈட்டியுள்ளது.

ஆனால், இந்தோனேஷியா என்ன சொல்லுகிறது? "இந்த நாட்டிற்கு மிஷனரிய குருமார் தேவையில்லை என்று இந்தோனேஷிய அரசாங்கம் கருதுகிறது" என்கிறார் அந்த நாட்டு அரசாங்கத்தின் மதசம்பந்தமான பொதுக் காரியகாரர், அறிஞர் கப்பிராவி. பிறதேசகுருமார் அங்கு செல்வதற்கு "விசா" என்னும் உத்தரவு கொடுக்க மறுக்கிறார்கள் அரசாங்கத்தார்.

கத்தோலிக்கர் பரோபகார சேவை புரியலாமே யொழிய வேத போதக வேலை செய்ய வேண்டாம். பிறதேச குருமார் இங்கு (இந்தியாவுக்கு) வராமற் தடுக்க வேண்டும் என்று சில இந்திய மந்திரிமார் கூறிநின்றார்கள். ஆனால், இப்பொழுது மனம்மாறி யிருக்கிறார்கள். கிறீஸ்துவ மதத்தைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். இப்படியெல்லாம் திருச்சபைக்கு எதிர்ப்பும், செல்வாக்கும் இருந்து வருகின்றன.

உங்கள் செபமும் தபமும் எதிர்ப்பைப் போக்கி, தேசங்கள் நம் திருவேதத்தை வரவேற்கச் செய்யும். உங்கள் பரித்தியாகமும் தருமமும் எமது வேதத்திற்கு அதிக செல்வாக்கைத் தேடிக் கொடுக்கும். உங்கள் உதார குணத்தைக் காட்டுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணா

## தலைவனின் மகன்

அப்பா! அம்மா! தாங்கமுடியாது... ஊ... நடுங்குகிறது. அந்தக் கம்பளிப் போர்வையால் மூடுங்கள்...கக், கக்... ஐயோ தண்ணீர்; தாகத்தால் சாகிறேன்..

கபர்நாகூம்ஊரின் தலைவன் வீட்டில் மேற்கூறிய கூக்குரலும், நடுக்கமும். கட்டிலில் பையன் ஒருவன் அங்குமிங்குமாக உழன்று வருந்துகிறான். தாய் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு மகனுடைய வியர்வையைத் துடைக்கிறாள். பின் நெற்றியைத் தொட்டுப் பார்க்கிறாள். நெருப்பாய்க் காய்கிறது சுரம். என்ன செய்வதென்று அவள் ஏங்குகிறாள்.

வருத்தமென்று அவன்படுத்து மூன்று நாட்கள் மாத்திரம். அவ்வூரில் உள்ள திறம் வைத்தியனால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. மாந்திரீகனைக் கூப்பிட்டார்கள். அவனும் குழையடித்துத் தன்வித்தையெல்லாம் பிரயோகித்தும் பையனுடைய நிலைமையில் மாற்றமில்லை.

கானாவிலிருந்து வருத்தம் பார்க்க வந்த யாரோ ஒருவர் யேசுவைப்பற்றிச் சொன்னார். யேசு கண்தெரியாத திமேயசுடைய மகனுக்குக் கண்வெளிச்சங் கொடுத்தார்; பிசாசுகளை ஓட்டுகிறார்; ஏன், அவருடைய சீஷன் பேதுருவின் மாமியார் நெடுநாளாகக் காய்ச்சலாய் இருந்தவள்; அவர்வந்து அவளைத்தொட்டதும் காய்ச்சல் கழிச்சல் எல்லாம் காற்றாய்ப் பறந்து விட்டது என்று சொல்லி முடித்தார்.

தண்ணீரில் அமிழ்ந்துகிறவனுடைய கையில் கட்டை அகப்பட்டது போலானான் ஊர்த்தலைவன். துணைக்கு இரு வேலையாட்களுடன் குதிரையிலேறிக் கானாவுக்குப் புறப்பட்டான். வாயு வேகமாய்ச் சென்றன குதிரைகள்.

யேசுவைக் கண்டு சலாம் செய்தான். "என் மகன் வருந்துகிறான்; செத்துப்போனானோ தெரியாது; குருவே! தயைகூர்ந்து வரவேண்டும்; என் மகனைத் தாங்கள் தொட்டாற் போதும்; அவன் குணமடைந்து விடுவான்."

யேசு அவனை நோக்கினார். அவன் விசுவாசம் உறுதியற்றது என்று அறிந்தார்.

"நீங்கள் அற்புதங்கள், ஆச்சரியங்களைக் கண்டாலொழிய விசுவசிக்க மாட்டீர்கள்" என்றார் மறுமொழியாக.

யேசு யாரென்று நினைத்து இவன் வந்தான்? மாந்திரீகர் குழையடித்து முணுமுணுப்பது போல இவருஞ் செய்வாரென்று நினைத்தானோ? இவர் சரீரத்தைத் தொட்டுக் குணமாக்க மாத்திரமல்ல, தமது வாக்கினால் சகல துன்பங்களையும் போக்கவுமே வல்லமையுள்ளவர். குணப்படுத்த வல்லவரென்றால் எவ்வழியாயும் தவ்வல்லமையைப் பிரயோகிப்பார். தேவனுக்குக் கட்டுப்பாடு ஏதும் உண்டா?

சிற்றரசன் அறிவு பெற்றான். யேசு கடவுள் என்று பூரணமாய் விசுவசித்தான். "சுவாமி, என் மகன் சாகிறதற்குமுன் வரவேண்டும்."

அவன் விசுவாசத்தை அறிந்த யேசு சுவாமி: "நீ போகலாம்; உன் மகன் பிழைத்திருக்கிறான்" என்றார்.

*  *  *

தலைவன் தன்பரிவாரத்துடனும், மகனைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவலுடனும் திரும்பினான். போகிறவழியில் சிநேகிதர்சிலர் சந்தித்தனர். குமாரன் தப்பி விட்டான், சுகமே இருக்கிறான் என்றனர்.

எந்நேரம் குணமானான்?

நேற்று ஏழுமணியளவில். அந்நேரம்தான் யேசு "உன்மகன் பிழைத்திருக்கிறான்" என்று சொன்னது அவனுக்கு ஞாபகத்தில் வந்தது.

யேசு சாதாரண தீர்க்கதரிசி அல்ல. சருவேசுரன் அனுப்பிய குரு, தேவன் என்று அவன் விசுவசித்தான். அவனும், அவன் வீட்டாரும் விசுவாசித்தார்கள்.

(ஞாயிறுசுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## உன்னுடைய வயது

உன்னுடையவயதை அறிந்துகொள்ள விரும்புகிறாயா? நல்லது. நீ பிறந்தது எத்தனையாம்மாதம் என்றுசொல். அந்த மாதத்தின் இலக்கத்தை இரண்டாற்பெருக்கி வந்ததொகையுடன் ஐந்தைக்கூட்டி வந்ததொகையைத் திரும்ப ஐம்பதால் பெருக்கு. பெருக்கிவந்த தொகையுடன் உன்வயதைச் சேர்த்துக்கொள். சேர்த்துவந்த தொகையிலிருந்து 365ஐக் கழித்து, 115ஐச் சேர்த்துக்கொள். அந்த எண்ணிலே நீ பிறந்த மாதமும், உன்னுடைய வயதும் இருக்கின்றன.

உதாரணமாக, நீ பிறந்த மாதம் மூன்றும் மாதம் என்று வைத்துக் கொள். இந்த 3 ஐ 2 ஆல் பெருக்கினால் 6வரும். 6 உடன் 5 ஐக்கூட்டினால் 11வரும். இதனை 50ஆல்பெருக்கினால் 550வரும். இத்துடன் உன் வயதைக்கூட்ட (அதைப் 10என்று வைத்துக்கொள்) 560வரும். இதிலிருந்து 365ஐக்கழித்தால் 195வரும். இத்துடன் 115ஐக் கூட்ட வருவது என்ன? 310. முன்னுக்கு இருக்கும் இலக்கம் 3 நீ பிறந்தது எத்தனையாம் மாதம் என்பதைக் காட்டுகிறது. பின்னுக்கு இருக்கும் 10 உன் வயதைக் காண்பிக்கிறது.

## கண்டு பிடியுங்கள்

| | | | |
|---|---|---|---|
| ம் | | | |
| | | ச | |
| | ய | | |
| | | | ர |

இதை நிரப்பினால் சென்ற வாரப் பாதுகாவலனில் நீங்கள் கண்ட ஓர்தலையங்கத்தைக் காணலாம். நிரப்புங்கள் பார்க்கலாம்.

— J. A. G.

(1) மேரி எனது சகோதரி. அவளுக்கு வயது அதிகமல்ல. இன்னும் 12 வருடங்களில் அவளின் வயது இருமடங்காகிவிடும். தற்போது வயதென்ன?

(2) பின்வரும் சதுரங்களில் காலியாய் விடப்பட்டிருக்கும் இடங்களை நிரப்புக. எந்தப்பக்கம் கூட்டினாலும் 34 வரவேண்டும். எடுக்கும் எண்கள் ஒன்று துவக்கம் 16-க்கு மேற்படக் கூடாது. ஒருமுறை பாவித்த இலக்கத்தை மறுமுறை பாவிக்கக்கூடாது.

| | | | |
|---|---|---|---|
| 4 | | | 1 |
| | | | |
| | | 10 | |
| 16 | | | 13 |

(3) யான் என்தங்கைக்கு ஒருகடிகாரம் வாங்கிக் கொடுத்தேன். அது நாள் ஒன்றிற்கு இருமுறை சரியான நேரம் காட்டும். அது எப்படி?

(4) யான் நேற்றிரவு படுக்கைக்குச் சென்றேன். சிறிதுநேரம் நித்திரை செய்துவிட்டுத் திடீரென்று விழித்துக் கொண்டேன். யான் விழித்தவுடன் எங்கள் மணிக்கூடு ஒருதரம் அடித்தது. சிறிதுநேரத்தின்பின் திரும்பவும் ஒருஅடி அடித்தது. இன்னும் சிறிது நேரத்தின்பின் ஒருஅடி அடித்தது. அதன்பின் யான் நித்திரையாகிவிட்டேன். யான் விழித்த நேரம் என்ன?

எஸ். ஜே. ஜீ. எவ்.
சூராவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுசிலாவும் நற்குணமும்

(அண்ணு)

ஞாயிறன்றுகாலை கதிரவன் தலை காட்டுமுன் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம் ஆரவாரம் நிறைந்துபோய் இருந்தது. எங்கும் ஒரே தலைக்காடு. வெறுந்தலைகள், வாரி உச்சிவயிர்ந்த தலைகள், துப்பட்டிபோட்ட தலைகள், துப்பட்டியில்லாத தலைகள், சில பெரிய தலைகள் அங்குமிங்குமாக உலாவிக் கொண்டிருந்தன. அவ்வேளை கிரேக்க புராணக் கதைகளிலுள்ள ஒருசம்பவம் என்ஞாபகத்திற்கு வந்தது. அது எனக்குச் சம்பூரணமாகத் தெரியாது. யேசன் என்ற ஒருவீரனைப்பற்றிய நினைவிருக்கிறது. அத்துடன் ஏதோபற்களை ஒருவயலில்விதைக்க, அவையெல்லாம் அடுத்தநாள் வீரர்சைனியமாக வளர்ந்தனவாம். அந்த மாயவயல் அதுதானேவென்று சந்தேகிக்கச் செய்தது அந்தக்கல்லூரி மைதானம்.

திவ்வியபூசை முடிந்து மைதானத்தைவிட்டு வீட்டுக்குச் சென்றேன். பின்னுல் கூ...ஊ...வென்றதால் கேட்டேன். திரும்புவதற்குமுன், என் இருகாங்களையும் பிடித்து இருவர் இழுப்பதை உணர்ந்தேன். யார்? சுசீலாவும், நற்குணமும். இருவரும்:

"வாருங்கள் காட்சிபார்ப்போம்."

"ஐயோ, மெத்தப்பசிக்குது; பசியாறிவிட்டுவந்து பார்ப்போ"மென்றேன்.

இன்றைக்கு விருந்து கொடுக்கிறது எங்களுடைய முறை; வாருங்கள் போசனசாலைக்குப் போவோம் என்று பற்றியகாங்களை விடாமல் இருபேரும் என்னை அழைத்துச் சென்றார்கள்.

உணவு அருந்திவிட்டுக் கல்லூரிப் புதிய கட்டடத்திலுள்ள காட்சிகளைப் பார்க்கச் சென்றோம். அந்த கிறிஸ்தியன் பிறதர்மார் நின்று, தங்கள்சபைச் சந்நியாசிகள் எவ்வெவ்விதமான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை விளங்கப்படுத்தினார்கள். அச்சபையின் பிரதமஅதிபருக்குப் பன்னிரண்டுஉதவி அதிபர்களாமே. இதைக் கேட்டதும் குணம் மலைத்துப்போனான். அறையின் ஒருமூலையில் ஒருவிநோதம். அதை அவன் கூர்குறிப்பாய்ப் பார்த்தான். சீவிய பனைமரத் தூண். ஒருபக்கத்தில் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரின் படம் அதன்கீழ் பீற்றர்ப்பிள்ளை சுவாமியாரின் படம். அதன்கீழ் கிறிஸ்தியன் பிறதர் லூக் அவர்களின் படம். வட்டில் மேற்சொல்லியவர்களும், காலஞ்சென்ற ஸ்ரீமான் ஸ்ரானிஸ்லாஸ் அவர்களும் உட்பட எடுத்த கூட்டுப் படம். சென் பெனடிற் கல்லூரியின் பேறுதான் என்னே!

அடுத்த அறையில் வெள்ளைஉடை தரித்த கன்னிடர்சிலர் நின்றனர். ஒருவர் முகமலர்ந்து எங்களை வரவேற்றனர். தொடக்கத்திலிருந்தே விளங்கப்படுத்தினர். சுசீலா எல்லாவற்றையும் அவதானமாய்க் கேட்டாள்.

குணம்— இவர்கள் பெரியஆஸ்பத்திரியிலே இருக்கிறவர்களா? நான் மாமாவைப் பார்க்கப்போன பொழுது கண்டனான்

சுசீலா— சீ, என்ன அருவருப்பான வேலை. புண் கழுவுகிறதென்றால் இலேசாகவா இருக்கும்!

சிஸ்றர்— ஆம் பிள்ளாய், இது இலேசானதல்ல; ஆனால், கிறீஸ்துவின் நேசத்திற்காகச் செய்யும் பொழுது அது சந்தோஷந்தரும்; இலகுவாயிருக்கும்.

சுசீலா தொடர்ந்து கேள்விகளைக் கேட்டு அறிந்துகொண்டு மற்றப் படங்களையும் பார்த்தாள். இவர்கள் படிப்பித்தல், சிசுக்களையும், வயோதிபரையும் பராமரித்தல், சேரிகளுக்குச்சென்று சுகாதார முறைகளைப் பழக்குதல் முதலிய தொண்டுகளையுஞ் செய்கிறார்களென அறிந்தாள். அறையைவிட்டு வெளியேறும்பொழுது இச்சபையைப் பற்றிய வரலாறுகளையும், ஊழியத்தையும்பற்றி அறிவிக்கிற துண்டுப்பத்திரங்களையும் பெற்று நன்றி கூறிவிட்டு அடுத்த அறைக்குச் சென்றோம்.

அவ்வறையில் இரண்டு இளஞ் சுவாமிமார் நின்றார்கள். அவர்கள் நற்குணத்தை அழைத்து விளக்கஞ் சொன்னார்கள். ஒருஇடத்தில் ஆரம்பத்திலிருந்து மேற்றிராணிப் பட்டம்வரையும் தரிக்கும் உடைகளைக் காட்டும் பொம்மைகள் இருந்தன. இன்னொரு இடத்தில் குருப்பட்டச்சடங்கின் வெவ்வேறு அம்சங்களைக் காட்டும் போட்டோப் படங்கள் இருந்தன. கிறீஸ்துநாதரின் குருமார் உலகின் எப்பாகத்திலுமே தேவஊழியஞ்செய்துவருகிறார்களென்று காட்டப் பூகோள உருண்டை சுழன்றுகொண்டு இருந்தது. "தேவ ஊழியத்துக்கு அழைக்தல் இருக்கிறதென்பதின் அடையாளம் என்ன?" என்றான்குணம். விமரிசகர் சற்று யோசித்தார். சொல்ல வேண்டியவைகளை ஞாபகத்தில் வருவித்துக் கொண்டு:

"பிரதானமான அடையாளம்: தேவஊழியஞ்செய்வதற்கு உண்மையான தளராத ஆசை கொள்ளவேண்டும். இரண்டாவது, சாதாரண புத்திநுட்பம் இருக்கவேண்டும், மூன்றாவது, நல்ல சுகதேகியாய் இருக்கவேண்டும்." குணம் அவரை ஏறஇறங்கப் பார்த்துவிட்டுச் சொல்லப்பட்ட அக்குணங்கள் அவரிடம் உணடென்று தீர்மானித்தான். "நானும் குரு ஆகலாமா, அண்ணு?" பொருத்த கேள்வி. "சுவாமி சொன்ன குணங்கள் இருந்தால் நீரும் சுவாமியாகலாம்" என்றேன்.

பின்பு "ஒபிளேற்" சுவாமிமார் எங்கெங்கே, என்னென்ன ஊழியஞ் செய்கிறார்கள் என்றுவிளக்கும் பெரிய படத்தைப் பார்த்தோம். இலங்கையிலே அவர்கள் நடத்திவரும் ஊழியங்கள்: பல மிசாங்களில்வேலை, ஞானவொடுக்க போதகவேலை, கல்லூரிகள், கைத்தொழிற்சாலைகள், அனுதமடங்களை நடத்தும்வேலை, பாலியகுற்றவாளிகளைத் திருத்தும்வேலை, இளந்தொழிலாளர் சம்மேளனம் முதலியனவற்றைப் பார்த்துவிட்டு "இவ்வளவு வேலைகள் செய்கிறார்களா?" என்று வியப்புடன் கேட்டாள் சுசீலா.

"இவைமாத்திரமா, அவர்கள் கட்டிய கோயில்கள் எத்தனை, நடத்தும் பள்ளிக்கூடங்கள் எத்தனை, தேவமாதா பக்தியை எவ்வளவாகப் பரப்பியிருக்கிறார்கள் என்றெல்லாம் எழுதியிருக்கிறது அல்லவா?" என்று மறுத்தான் கேள்வி ஒன்று போட்டான் குணம். "மற்றவைகளை இன்னும் பார்க்கவில்லையே, வாருங்கள் பார்ப்போம்" என்று என்னை அழைத்தான் குணம்.

பிரான்சிஸ்கன் மிஷனரிய கன்னியாஸ்திரிமாருடைய வேலைகளைப் பார்வையிட்டோம். தேவநற்கருணைப் பலியிலும், நித்தியஆராதனையிலு மிருந்து வேண்டிய ஞானசக்திபெற்றுப் பல்வேறு ஊழியஞ்செய்ய அக்கன்னியர்செல்லுங்காட்சி கருத்து நிறைந்திருந்ததைக் காட்டினேன். சுசீலா அவர்களின் தையல்வேலை, சித்திரத்தையல் வேலையிலே கண்ணுங் கருத்துமாயிருந்தாள். ஓர்மூலையில் பீடமும், மெழுகுவர்த்திகளும் சற்பிரசாதஎழுந்தேற்றம் போலிருக்க, ஒருகன்னியாஸ்திரியின் உருவம் ஆராதனை செய்வது போல் இருக்கிறதைப் பார்த்துவிட்டு, குணமும் ஆராதிக்கப்போனான். நான் அவனை இழுத்து எழுப்பி விட்டேன். "இக்கூட்டத்தைச்சேர்ந்த வேதசாட்சிகளும் இருக்கிறார்களென்று" சுசீலா ஒருபடத்தைக் காட்டிச் சொன்னாள். "அந்தா அது அசுந்தா கன்னியாஸ்திரி. அவவுக்கு அடுத்த மாதம் 7-ந் திகதி முத்திப்பேறுபெற்ற பட்டம் கிடைக்கும்" என்று அங்குநின்ற கன்னியாஸ்திரி கூறினதைக் கவனமாய்க் கேட்டான் குணம்.

நாங்கள் மூவரும்கண்ட மற்றக்காட்சிகளும் உண்டு. இந்தக் காட்சி மற்ற வருடமும் நடக்குமா? என்று குணம் கேட்டான். "சமாகம குழுவினருக்கு அறிவிக்கிறேன்" என்றேன் நான்.



# பெற்றோரே, ஒருவார்த்தை!

கதுப்புக் கன்னத்துடன், குமுதவிழியுடன், அமுதவாயுடன், கோவ்வை இதழுடன், கொஞ்சும் மொழியுடன், காலை அழகுடன், கற்பனைக்குஎட்டாத பொற்பாவைப் பொலிவுடன், உயிருடன், ஊமைச்சிரிப்புடன், தித்திக்கும் சுவையுடன், சின்னஞ்சிறு கிளியாய், தெவிட்டாத காட்சியாய், செல்வக்களஞ்சியமாய்........

ஆமாம்! ஒருகுழந்தையைப் புகழ்வது எளிதல்ல ஏனென்றால், அது கடவுளின் மங்காத அழகிய உயிரோவியம். இறைவன்வார்த்த சிவப்பதுமை. அவர்சட்டிய முத்துமணிக்கோவில்.

பெற்றோரே! இத்தனை சிறந்தசெல்வம் உங்களுடையது. ஆம், உங்களுடையவர்கள்தானே உங்கள் குழந்தைகள். இறைவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள செல்வங்கள் அவர்களேஅல்லவா? இச்செல்வங்களைக் களஞ்சியத்தில் பூட்டிவைத்தால் அவைகள் பூழுங்கிப் போகும். வெளியிலே அக்கறையின்றி உலரவிட்டால் காய்ந்து போகும். ஆனால், இவற்றை இறைவனுக்கே திரும்பவும் அர்ப்பணித்தால் அவைகள் தெய்வ உயிர்பெற்றுத் தேசோமயமாகும் அல்லவா?

ஒருகுழந்தை அழகுடையதானால், ஆண்டவரின் ஒருகுரு... தேவதூதரிலும் மேலான நிலை அல்லவோ அது?

அன்னைமடி தவழும்சேய் அழுதானால், ஒருகன்னிகை.... விண்ணுலகில் பூக்கும் வள்ளிக்கொடிகள் அன்றோ தூயகன்னியர்?

தமதுமக்களைத் தேவஊழியத்திற்கனுப்பும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கிறதோ, அந்தப் பெற்றோர் இவ்வுலகிலும், மறுவுலகிலும் பாக்கியசாலிகள்!

தேவ அழைத்தல் ஒரு தனி வரம். அவ்வரத்தின் முதல் விதை வீட்டிலே, தாயின் அன்பிலே தோய்ந்து பிள்ளையின் நெஞ்சில் விழுகின்றது.

இம்மாதத்திலே வேதபோதக நாடுகளில் குருமாரின் தொகையும், வகையும் உயரவேண்டுமென்று நாம்எல்லோரும் மன்றாடும்படியாகத் திருச்சபை நம்மைக்கேட்கின்றது.

"ஒவ்வொருகத்தோலிக்க தாயும்தகப்பனும் தாங்கள் எந்த விதமான நிலையில் இருந்தாலும் சரி, தங்கள்பிள்ளைகளுள் ஒன்ருவது தேவஊழியத்திற்கு அழைக்கப்படும்படி கட்டாயம் செபிக்கவேண்டும்" என்று கூறுகின்றார் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர்.

பெருந்தொகையான தேவஊழியர் இன்றுதேவை. நம் தமிழ்நாட்டிலே இருக்கிற வேலைக்கு, இப்போது இருக்கிறதைப்போல் இன்னும் எத்தனையோமடங்கு குருமாரும், மற்றும் தேவஊழியரும் வேண்டுமே! எண்ணத்திலும, குணவண்ணத்திலும் குருமார்பெருகவேண்டும். இத்தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளத் திருச்சபையின் ஒரே நம்பிக்கையாக இருப்பவர்கள் நீங்களே அல்லவா?


தமது மக்களுள் சிறந்தவர்களைத் தேவ திருப்பணிக்குத் தாராளமனதுடன் அனுப்பும் பெற்றோர் பாக்கியசாலிகள். தான்பெற்ற பிள்ளைகளுள் ஒன்ருவது தேவ அழைத்தலைப் பெறும்படி அயராமல் செபித்துத் தனது முன்மாதிரிகையால் அதனை எண்பித்துவரும் தாய் இப் பாக்கியத்தை நிச்சயமாக அடைந்துகொள்வாள். அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்.

"ஒரு குருவின் தாய்" என்னும் புகழ்ச்சியைவிட வேறு சிறந்தமகிமை ஒருதாய்க்குஏது? அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

---

● இங்கிலாந்துச் சபையிலுள்ள உபேட்சையானநிலைமை பின்னருமே தொடர்ந்து இருந்துவருமானால் இன்னும் 50வருடங்களுள் பிரித்தானிய தேசம் "இத்தாலியிலுள்ள பாப்பானவரின் மகாகுருபீட ஆஞ்ஞையின்கீழ் திரும்பவுமிருக்கும்" என லிவர்ப்பூல் நகரிலுள்ள அங்கிளிக்கன்சபை ஆசனக் கோவிலில் கனம். டி. றெயில்ரண்பாதிரியார்செய்த பிரசங்கம்ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாகம சுபதினமன்று சாயந்தரம் 4 மணிக்குச் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்திலே சமாகம மகாசுற்றுப்பிரகாரத்துக்கெனச் சமுகமளித்திருக்கும் மாபெரும் பக்தர் குழாம் மத்தியிலிருந்து சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாகிறது.

# கம்யூனிஸம் இதுதானா?

(Sister Mary Amatora, O. S. F.)

பிரபல எகிப்திய பத்திரிகை நிருபரும், கட்டுரையாளருமான அலிஅமீன் அவர்கள் "அப்கில் அல்காவித்" என்ற பத்திரிகையில "உள்ளிலும வெளியிலும் ஏகாதிபத்தியம்" என்ற தலைப்பைக் கொண்டவரைந்துள்ள கட்டுரையில் கம்யூனிஸத்தைப்பற்றிப் பின்கண்டவாறு எழுதியுள்ளார்:

"கம்யூனிஸம் ஒருஅரசியல்கொள்கையாய் இருந்திருப்பின், நமதுநாட்டிலுள்ள கம்யூனிஸ்தர்களுக்குப் பூரண பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் தங்கள்கொள்கையைப் பிரசாரம்பண்ணப் பூரணசுதந்தாம் அளிக்கப்பட வேண்டுமென்றும் நான்கேட்டிருப்பேன். ஆனால், கம்யூனிஸம் ஒரு அரசியல் கொள்கையுமல்ல, சமூகத்தைப்பற்றிய கொள்கையுமல்ல.

"கம்யூனிஸம் துருக்கிநாட்டுத் தொழிலாளர்களை வேலை நிறுத்தஞ்செய்யத் தூண்டுகிறது. ஆனால், ருஷியதொழிலாளர்கள் வேலை நிறுத்தம்செய்ய விரும்பினாலோ அவர்கள் "கன்சென்ரேஷன் காம்ப்" என்ற சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஒருநாளில் ஐந்துமணிநேர வேலையே இருக்கவேண்டுமென்று கேட்குமாறு பிரான்சிய தொழிலாளர்களைக் கம்யூனிஸம் தூண்டுகின்றது. ருஷியதொழிலாளர்களையோ ஒருநாளைக்குப் பன்னிரு மணிநேரம் வேலைசெய்யக் கட்டாயப்படுத்துகிறது.

"அமெரிக்க ஐக்கியதேசத்திலே கம்யூனிஸ்தகட்சி சட்டபூர்வமான கட்சிகளுள்ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று கம்யூனிஸம் அறைகூவுகிறது. ஆனால், ருஷியாவிலோ கம்யூனிஸ்தகட்சியைத்தவிர வேறெந்தக்கட்சியும் இருப்பதற்குத் தடைவிதித்துள்ளது. ஜேர்மனியரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறச் செக்கோசிலவாகியநாடு தொடுத்தபோரில் கம்யூனிஸம் உதவிபுரிந்தது. ஜேர்மனியர் செக்கோசிலவாகியாவைவிட்டு வெளியேறினபிறகோவெனில் ருஷியா அந்த நாட்டை வசப்படுத்திக்கொண்டு, தேசத்தலைவரை ருஷியாவே தெரிந்தெடுத்ததுமன்றி, செக்கோசிலவாகிய இராணுவத்திற்கு ருஷிய ஜெனறல்களே தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

"உலகெங்குமுள்ள கமக்காரர்களைத் தங்கள்விளைபொருட்களுக்கு அதிகவிலை கேட்கும்படியாகக் கம்யூனிஸம் தூண்டுகிறது. ஆயினும், உக்றேனிய கமக்காரர் தங்கள் கோதுமைக்குத் தகுந்தவிலை கொடுக்கப்படவில்லையென்று முறையிட்டபோது, சோவியற்பொலிசர் அவர்களைச் சுட்டுக்கொன்றனா.

"கம்யூனிஸம் உள்நாட்டிலுஞ்சரி, வெளிநாட்டிலுஞ்சரி ஏகாதிபத்தியமே தவிரப் பிறிதொன்றுமல்ல. இந்தத்திட்டத்தில் தனிமனிதனின் உரிமைகளும், சமூகங்களின்உரிமைகளும் பறிக்கப்பட்டுவிடுகின்றன. கம்யூனிஸ்த ஆட்சியில் ஒருவன் எதைப்பற்றியும முறையிட அவனுக்கு உரிமையில்லை. அவனபிரியப்படும் பத்திரிகையை வாசிக்க அவனுக்கு உரிமையில்லை. தனக்குப்பிடிக்கும் பாட்டைக்கேட்க அவனுக்கு உரிமையில்லை. மலென்கொவ் வாசிக்கும் பத்திரிகையையே அவனும் வாசிக்கவேண்டும். மொலற்ருேவுக்குப் பிரியமான பாட்டுத்தான் அவனுக்கும் பிரியமானபாட்டாகவேண்டும்.

"கம்யூனிஸ்ததிட்டத்திலே அரசாங்கத்தின் தலைவனே ஒருவனை வீரனாகவோ, தேசத்துரோகியாகவோ ஆக்கவேண்டும். நாட்டில் பேறியாவே மிகப்பெரிய மனிதன்என்று ஸ்ராலின் சொல்லும்போது ஒவ்வொரு கம்யூனிஸ்தனும் ஸ்ராலின்சொல்லுவதே சரியென்று ஒப்புக்கொண்டு பேறியாவை உற்சாகத்துடன்போற்றிப் புகழவேண்டும். பேறியா அமெரிக்க மக்களின் வேவுகாரன்என்று மலென்கொவ்சொல்லும்போது, ஒவ்வொரு கம்யூனிஸ்தனும் மலென்கொவ் சொல்லுவதே சரியென்று ஒப்புக்கொண்டு, பேறியா மரணதண்டனைக்கு ஆளானதை ஆமோதிக்கவேண்டும். ஏன், எப்படியென்று விளக்கம்கேட்டாலோ அவன் தேசத்துரோகியென்று குற்றஞ்சாட்டப்படுவான். பேறியா கோட்டில் சொன்னவற்றைத் தான் அறியவிரும்புவதாக ஒருகம்யூனிஸ்தன் தெரிவித்தால் அவன் சுதந்தரத்தின்விரோதியென்று குற்றஞ்சாட்டப்படுவான்.

"கம்யூனிஸ்தஆட்சியிலே ஒருமாணவன் அல்லது மாணவி, அவன் அல்லது அவள் பிரியப்பட்ட கல்விச்சாலைக்குப் போகமுடியாது. பிரியப்பட்டபாடங்களைத் தெரிந்தெடுக்க முடியாது. ஒருபரீட்சை கஷ்டமாயிருந்தால், மீண்டும்ஒருமுறை அதேபரீட்சைக்குச் செல்லமுடியாது.

"கம்யூனிஸ்தஆட்சியிலே பருத்தி விளைவிப்பவன் [illegible] சரமானவிலை கேட்கக்கூடாது. மஸ்கோ அதிகாரிகளாலேயே விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலகின் மற்றப் பகுதிகளில் பஞ்சின்விலை எவ்வளவுஏறினாலும், இறங்கினாலும் அதைப்பற்றி அவன் கவனித்துக்கொள்ளக்கூடாது. மஸ்கோவித்தவிலைக்கே அவன் தனது பஞ்சை விற்கலாம்.

"கம்யூனிஸ்தஆட்சியிலே அரசியல் அலுவலாளர் தங்களுக்குள்ள குறையைப்பற்றி முறையிட்டுக்கொள்ள விசாரணைமன்றம் கிடையாது. ஒரு அலுவலாளரின் குறைகளை எந்தப்பத்திரிகையும் பிரசுரிக்கவும்முடியாது. எதைப்பற்றியாவது முறையிடும்உத்தியோகஸ்தர்கள் தேசத்துரோகிகளாகப் பாவிக்கப்பட்டு விரட்டப்படுகின்றார்கள்.

"கம்யூனிஸ்தஆட்சியிலே கல்விமான்கள்கூட, சர்வகலாசாலைகளிலுள்ள பேராசிரியர்கள்கூடக் கம்யூனிஸ்தரல்லாதவர்கள் எழுதிய நூல்களை வாசிக்கஉரிமையில்லை. அந்தநூல்களிலுள்ள 'பிற்போக்கான' கருத்துகள் வாசிப்பவர்களின்புத்தியைப் பேதலிக்கச்செய்துவிடுமாம்.

"பத்திரிகாசிரியர்களும், பத்திரிகைகளில் கட்டுரைஎழுதுபவர்களும் முதல் மந்திரிகட்டளையிட்டாலொழிய எவரையுமேதாக்கி எழுதக்கூடாது. வழிபறி, திருட்டு, கொலைபோன்ற சம்பவங்களைப்பற்றிச் செய்திஎழுதக் கூடாது. ஏனெனில், சோவியற்நாடு குற்றமில்லாத இலட்சியநாடு.

"இந்தக் காரணங்களெல்லாம் பற்றியே நாங்கள் கம்யூனிஸத்தை எதிர்த்துநிற்கிறோம். நாங்கள் அதை எதிர்த்துப் போர்புரிகிறோம். ஏனெனில், அது தனிமனிதர்களுடையவும், சமூகங்களுடையவும் சுதந்திரத்தைக் கழிதோண்டிப் புதைக்கிறது. அது மக்களை ருஷியாவுக்கு அடிமைத்தொண்டுபுரியும் ஊமைமாக்களாக மாற்றிவிடுகிறது. அது எகிப்தியர்களின் தேசீயஇனத்தையும், அவர்களின் மதநம்பிக்கைகளையும், அவர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் நிர்மூலஞ்செய்ய முயலுகிறது."

---

இத்தாலியிலே குருடர்களின் அப்போஸ்தலிக்க படையணியைச் சேர்ந்த குருடர்கள் சமீபத்தில் லொறெத்தோ நாயகியின்திருசேத்திரத்திற்கு முதன்முதலாக யாத்திரைசெய்து, தங்கள் விசுவாசவெளிச்சத்தை இழந்து ஞானக்குருடராய் இருக்கிறவர்கள் மனந்திரும்பும்படியாக மன்றாடிக் கொண்டார்கள்.

## ஸ்ரீலங்கா துவீபத்திலே முதற் திவ்வியபூசை நிறைவேறிய 450-ம் வருட நிறைவு

எமதுசெல்வநாடாகும் ஸ்ரீலங்காதுவீபத்திலே முதன்முதலாகத் திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட 450-ம் வருட நிறைவுதினம், அடுத்துநிகழும் 1955-ம்ஆண்டு மார்கழிமாதம்8-ந்திகதியாகும். அன்றுதினம் முதன்முதலாக எமதுமண்ணில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திவ்வியபூசைப்பலியே எம்மத்தியில் உதித்த சத்தியவேத விசுவாசத்தின் சூரியோதடமென்று சொல்லின்மிகையாகாது.

ஆகவே, இப்படிப்பட்ட நிறைவு தினத்தை ஸ்ரீலங்காவிலுள்ள விசுவாசிகள்அனைவரும் நன்றித்துதியுடன் எதிர்பார்ப்பது மேன்மையும், தகுதியுமாகும். இந்தநோக்கத்துடனேயே அத்தினத்துக்குமுன்வரும் 450 நாட்களிலும் இலங்கையின் நாலுவிடங்களிலும் நாளுக்குஒன்றாக 450 திவ்விய பூசைப்பலிகளை ஒப்புக்கொடுப்பிக்கும் ஓர்நல்ல இயக்கம் மகாமேன்மைதங்கிய கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரின் ஆசீர்வாதத்துடனே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சென்றபுரட்டாசிமாதம் 14-ந்திகதி தொடக்கம் இத்தோத்திரப்பூசை பல்வேறுஇடங்களிலும் நாளாந்தம்ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது. சாதாரண கத்தோலிக்கரும், துறவறத்தவர், குருத்துவமாணவர் மடங்களும்,விசாரணைப்பங்குகளும் இப்போதுதொடங்கியே இந்தத்தோத்திரப் பூசைப்பலியை ஒப்புக்கொடுப்பித்து வருவதும், அவற்றிற் பங்குபற்றுவதும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர்சுபசெய்தியாகும்.

வருகிறமார்கழிமாதம் 4-ந்திகதி முதல் 13-ந்திகதிவரையிலுள்ள பத்து நாட்களும் யாழ்ப்பாணமேற்றிராசனத்துக்குக்குறிக்கப்பட்டுள்ளன. இந்நாட்களிலோ அன்றேல் பின்னர்குறிக்கப்படும் நாட்களிலோ இந்தத்தோத்திரப் பூசையில் பங்குபற்றி ஒப்புக்கொடுப்பிக்க விரும்புவோர் மேல்வரும்விலாசத்துக்கு எழுதுவார்களாக.

காரியதரிசி சுவாமியார்
மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.

இத்தோத்திரப்பூசை இயக்கத்தில் நாம்அனைவரும் தனித்தும், பொதுவிலும் பங்குபற்றுவதானது தேவன்நமக்கும், நமதுநாட்டிற்கும் அருளியவிசுவாச நன்கொடைக்கு நன்றிசெலுத்துவதாகும். திவ்வியபூசைப் பேறுபலன்களின்மூலம் எமதுதாய்நாட்டில் விசுவாசத்தைவளர்க்க நாம் தேவகிருபையை இரந்துகொள்வதுமாகும்.

இருதயங்களை மேலெழுப்புங்கள்! ஆண்டவராகிய நம்தேவனுக்கு நன்றித்துதி செலுத்துவோமாக!

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், கிறீஸ்தவர்களின் சகாயமாகிய தேவமாதாவின் சலுகையாலும், நம்பிக்கை அற்றவர்களின் நம்பிக்கையாகிய அர்ச். யூதாததேயுவின் உதவியாலும், அர்ச். டொன் பொஸ்கோ, முத். மாட்டின் தெபொறஸ் இவர்களின்மன்றாட்டாலும் எனதுதாயார் கடின வருத்தங்களில் நின்றுநீங்கிப் பூரணசுகம் பெற்றுள்ளா. ஆனதினால் நேர்த்திப்படி பிரசுரிக்கின்றேன்.

போளவத்தை எம். எம். கோமஸ்

* * *

## நன்றித்துதி

அர்ச். சகாயமாதாவே, எங்கள்மன்றாட்டுக்களைப் பெற்றுத் தந்ததற்காக நாங்கள் நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறோம்.

எஸ். ஜே. விக்ரோறியா

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 21-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org